# திருவாரூர் விற்பனைக்குழு செயலாளரின் செயல்முறைகள்

## பிறப்பிப்பவர் : திரு.சு.கண்ணன்

**செ.மு.ஆ.எண்.அ2/814/2023** **நாள் : 31.07.2025**

பொருள் : பணியமைப்பு - திருவாரூர் விற்பனைக்குழு - திரு.இரா.புனித ரஞ்சித் இளநிலை உதவியாளர் - பணி வரன்முறை செய்து ஆணையிடுவது – தொடர்பாக.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1914/PASD-B1/2023, நாள்: 10.08.2023.
2. இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.விகுப3/26022/2023, நாள் : 01.09.2023.
3. செயலாளர் (பொ), திருவாரூர் விற்பனைக்குழு, திருவாரூர் அவர்களின் செ.மு.ஆ.எண். அ2/814/2023, நாள் : 08.09.2023.

====

ஆணை:-

பார்வை (1) மற்றும் (2)இல் கண்ட கடிதத்தின்படி, திரு.இரா.புனித ரஞ்சித் அவர்களுக்கு திருவாரூர் விற்பனைக்குழுவில் தனியருக்கு இளநிலை உதவியாளரக பணிபுரிவதற்கு பணிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பார்வை 3இல் கண்ட செயல்முறை ஆணையின்படி, வலங்கைமான் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிய பணியிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, திரு.இரா. புனித ரஞ்சித், இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 19.09.2023 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்தும், தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் வேளாண்மை விற்பனைத் துறைத்தேர்வு மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவதோடு பவானிசாகர் அடிப்படை பயிற்சியினையும் முடிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

31/7/25

செயலாளர்
திருவாரூர் விற்பனைக்குழு
திருவாரூர்

31/7/25

பெறுநர் :
திரு.இரா.புனித ரஞ்சித், இளநிலை உதவியாளர்,
தலைமை அலுவலகம், திருவாரூர் விற்பனைக்குழு, திருவாரூர்.

<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை – 32.

நகல் :
1. பணிப்பதிவேடு
2. அ3 இருக்கை